# பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்ககம்
# குடிமக்களின் சாசனம்

## முன்னுரை

பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கம் அதிகார பூர்வமாக புள்ளிவிவர பணிக்குழுவும் புதுவை யூனியன் பிரதேசத்தின் வளர்ச்சிப்பணிக்கு எல்லா துறைகளின் புள்ளிவிவர தகவல்களையும் சேகரித்தல், தொகுத்தல், பகுத்தல், விரிவாக்கம் அளித்தல் மேலும் வெளியிடல் ஆகியவற்றிற்கான மைய முகமையாகவும் செயல்படுகிறது, தற்போதைய பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்கம் **1957** ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் புள்ளிவிவரம் மற்றும் மதிப்பாய்வு துறை என்ற பெயரில் உறுவாக்கப்பட்டது, வளர்ச்சிப்பணிக்கான கொள்கைகள் மற்றும் திட்டமிடுதலை முறைபடுத்துவதற்கு அத்தியாவசியமான ஒரு நிலையான புள்ளிவிவர அடிதளத்தை ஏற்படுத்துவதே இவ்வியக்கத்தின் தலையாய செயல்பாடாகும், இவ்வியக்கம் தொடங்கியதிருந்து பலவிதமான புள்ளிவிவர தகவல்களின் மைய மண்டலமாகவும், புதுவை யூனியன் பிரதேசத்தின் உள்ள அனைத்து புள்ளிவிவர செயல்பாடுகளை ஒருங்கிணைத்து கொடுக்கும் ஒரு புள்ளிவிவர தகவல் சேமிப்பு கிடங்காவும் மேலும் புள்ளிவிவர தகவல்களை பயனாளி அமைப்புகளுக்கு கொடுக்கும் ஒரு ஆதார அமைப்பாகவும் செயல்படுகின்றது.

பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கத்தின் **திரு.D:.மணிகண்டன்,I.A.S.** அவர்கள் நிர்வாக செயலராக இருக்கின்றார். **முனைவர்.S.வைத்தியநாதன்** அவர்கள் இவ்வியக்கத்தின் இயக்குநராக இருக்கின்றார். தற்போது இது சாரம், புதுவை-**13** பகுதில் உள்ள திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை கட்டிட வளாகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் செயல்படுகிறது. பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கத்துக்கு காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் கிளை அலுவலகங்கள் இயங்குகின்றன.

## செயல்பாடுகள்

பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கம் புதுவை யூனியன் பிரதேசத்தில் சமுக பொருளாதாரம் பற்றிய ஆரம்ப மற்றும் துணை புள்ளிவிவரங்களை சேகரித்துப் பகுக்கும் அதிகார பூர்வமான புள்ளிவிவர பணிக்குழுவாக செயல்பட்டு அவைகளைப் தகவல் ஏடு புத்தகமாக வெளியிடுகின்றது. இவ்வியக்கம் பொதுமக்களுக்கு நேரிடையான சேவையில் ஈடுபடாத போதும் இவ்வியக்கத்தின் வாயிலாக தொகுக்கபட்டு வெளியிடப்படும். புள்ளிவிவர தகவல்கள் வளர்ச்சிப் பணிகளுக்கான கொள்கைமுடிவுகள் எடுப்பதற்கும் மற்றும் தகுதியான செயல்திட்டங்களை நடைமுறைபடுதத்துவதற்கும் ஆதாரமாய் விளங்குகின்றது. பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கத்தின் வாயிலாக வெளியிடப்படும் தகவல் ஏடுகள் புத்தகங்கள் கீழ்வருமாறு:

1. புள்ளி விவர தொகுப்பு

2. தொழிற்கூடங்களின் வருடாந்திர ஆய்வு

3. ஆண்டு அறிக்கை

4. வரவு செலவு திட்டச் சுருக்க உரை

5. வரவு செலவு திட்டத்தை பொருளாதார நோக்கத்துடன் வகைபடுத்துதல்

6. அரசு பணியாளர்களின் கணக்கெடுப்பு

7. மாநில உள்நாட்டு உற்பத்திப் பொருள் மதிப்பீடு

8. தொழிற்கூடங்களின் உற்பத்தி திறன் குறியீட்டு எண்

9. புள்ளி விவர கையெடு

10. நகராட்சி செயல்பாடுகள்ஃவருடாந்திர புத்தகம்

11. புதுவை ஒரு கண்ணோட்டம்

12. விலைவாசி அறிக்கை

13. வேளாண்மை கணக்கெடுப்பின் அறிக்கை

14. விவசாய இடுபொருள் ஆய்வு அறிக்கை

15. பொருளாதார கணக்கெடுப்பு அறிக்கை

16. பருவ கால மற்றும் பயிர் நிலை அறிக்கை

## 1. வேளாண்மை கணக்கெடுப்பு

பயிர் செய்யும் நிலப் பரப்பை கணக்கெடுப்பின் அலகாகக் கொண்டு விவசாய கட்டமைப்பின் அளவு சம்பந்தப் பட்ட தகவல்களை சேகரிப்பது இதன் குறிக்கோளாகும்.

## 2. உரிய காலத்தில் அறிவிக்கும் திட்டம்

ஒவ்வொரு குறுவை சம்பா மற்றும் தாளடி பயிர் பருவத்தில் பயிரிடப்படும் அத்தியாவசியமான பயிர்களின் நிலப்பரப்பு மற்றும் உற்த்தியின் நம்பத்தகுந்த மதிப்பீட்டை கணக்கிடுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

## 3. பயிர் புள்ளிவிவர அபிவிருத்தித்திட்டம்

இத்திட்டத்தின் வாயிலாக பயிர்களின் நிலப்பரப்பு மற்றும் உற்த்தி பற்றிய புள்ளி விவரங்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மை அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யபடுகின்றது.

## 4. கால்நடை கணக்கெடுப்பு

இதுவரை பொருளாதாரம் மற்றும் புள்ளி விவர இயக்கத்திடம் அளிக்கபட்டிருந்த இந்தப் பொறுப்பு மத்திய அரசின் தற்போதைய முடிவின்படி மாநில கால்நடை பராமரிப்பு துறைக்கு மாற்றப்பட்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5. பொருளாதார கணக்கெடுப்பு

மாநில பொருளாதாரத்தில் விவசாயமற்ற முறைசாராதொழில் துறை தகவல்களை சேகரிப்பதுவே இதன் குறிக்கோளாகும்.

இம்மாநிலத்திலுள்ள தொழில்களின் புள்ளி விவரங்ளை சேகரிக்கும் பணிக்கென ஏற்படுத்தப்பட்ட சிறப்பு பணி அதிகாரியாக பொருளாதாரம் மற்றும புள்ளிவிவர இயக்கத்தின் இயக்குநர் செயல்பட்டுவருகின்றார்.

இயக்குநர் மத்திய மற்றும் மாநிலப் புள்ளி விவர அமைப்புகளின் ஆலோசனை நிலைகுழுவின் நிரந்தர உறுப்பினராக நியமிக்கப்பட்டுளளார்.

மேலும் இயக்குநர் இம்மாநிலத்திலுள்ள விலைவாசி சேகரிப்பு மையங்களின் மொத்த கண்காணிப்புக்கான மாநில ஒருங்கினைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வியக்கத்தின் விலைவாசி புள்ளி விவர பிரிவு 75 அத்தியாவசிய பொருட்களின் மொத்தம் மற்றும் சில்லரை விலைவாசியை புதுவை, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் உள்ள அங்கன்வாடிகளில் முறையாக ஒவ்வொரு வாரமும் அன்றைய நிலவரப்படி சேகரித்து அவற்றை பல்வேறு பயன்படத்துவோர் மற்றும் அதுதொடர்புடைய துறைகளுக்கு அனுப்புகிறது.

தேசியமாதிரி ஆய்வு நிறுவனத்தின் உத்தரவின்படி இவ்வியக்கத்தின் வாயிலாக ஒவ்வொரு வருடமும் சமுக பொருளாதார ஆய்வுகள் பொருள் கொன்ட தலைப்பின்படி சுற்று முறையல் நடத்தபடுகிறது. இந்த சுற்றுகளில் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்ள் கொள்கைகளை உருவாக்கவும் மற்றும் திட்டங்களை வகுக்கவும் பயன்படுகிறது.

புதுதில்யிலுள்ள மத்திய புள்ளி விவர நிறுவனத்தின் அறிவுரையின் படி பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்கம் நிகர மாநில உள்ளூர் உற்பத்தி பொரும் மற்றும் தனிநபர் வருமான

மதிப்பீடுகளை நடப்பு மற்றும் குறியீட்டு விலைவாசிப் படியும் தயாரிக்கின்றது. மாநிலத்தின் செழுமையை குறிப்பிடும் முக்கியமான பொருளாதார குறியீடுகளின் ஒன்றாகும் மற்றும் இது அரசாங்கம் செயல்படுத்தும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் திறனை தெரிந்துகொள்வதற்கு உதவுகிறது, தனிநபர் மாநில பொருளாதாரத்தின் தனிப்பட்ட மாற்றம் சார்புடைய இரு செயல்பாடுகளையும் கண்டறிய பயன்படுகிறது. இவ்வியக்கத்தின் வாயிலாக தயாரிக்கபட்டு வெளியிடப்படும் மாநில உள்ளூர் உற்பத்தி பொருள் மற்றும் தனிநபர் வருமான மதிப்பீடுகளை இம்மாநிலத்தின் பொருளாதார ஏற்றதாழ்வுகளை அளவிட்டு திட்ட ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்கு கொள்கை வகுப்போர்க்கு பயனளிக்கிறது.

புதுவை யூனியன் பிரதேசத்தின் பேரியல் மற்றும் நுண்ணியல் ஆகிய இவ்விரண்டின் அடிப்படையிலான சமுக பொருளாதார குறிப்புகளுள்ள விரிவான புள்ளிவிவர அடித்தளத்தை உள்ளடக்கிய ஒரு புள்ளிவிவர வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இந்த தகவல்களை பயன்படுத்தும் அமைப்புகளுக்கு தேவைப்படும் போதெல்லாம் தகவல் தொழில் நுட்ப வசதியை பயன்படுத்தி அவ்வப்போது கொடுப்பதற்க்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது மற்றும் இந்த தகவல்களை பயன்படுத்தும் அமைப்புகளுக்கு தேவைப்படும் போதெல்லாம் தகவல் தொழில் நுட்ப வசதியை பயன்படுத்தி அவ்வப்போது கொடுப்பதற்க்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் தொடர்பு

பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்கத்தில் இணை இயக்குநர் (வெளியீடுகள்) மக்கள் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். புதுவை யூனியன் பிரதேசத்தின் பல்வேறு துறைகளின் செயல்பாட்டு புள்ளிவிவர தகவல்களைப் பெற பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்கத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியை தொலைபேசி எண். 0413-2248685ல் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்.

இத்துறையின் அதிகாரிகளின் பொயர் மற்றும் பதவி அவர்கள் நிர்வகிக்கும் துறையின் பிரிவுகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் தகவல் பலகை இவ்வலுவலகத்தில்அமைக்கப்பட்டுள்ளது.

## நிர்வாக அமைப்பு

எல்லா வேலைநாட்களிலும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளக் கூடிய அதிகாரிகளின் பொயர் பட்டியலும் அவர்கள் நிர்வகிக்கும் துறையின் பிரிவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மின்னனு தபால் **eands.pon@nic.in**
அலுவலக தொலைபேசி எண்கள்: (0413)-2248816, 2248685, 2242475
தொலைநகல் : (0413)---- 2246709

| வரிசை எண் | அதிகாரி பெயர் மற்றும் பதவி | நிர்வகிக்கும் பிரிவு | அலுவலக தொலைபேசி எண் | மின்னனு தபால் |
|---|---|---|---|---|
| 1. | முனைவர். சு.வைத்தியநாதன் இயக்குநர் | இயக்க தலைவர் நிருவாகம் மற்றும் துறை நுட்பம் | (0413)-2248816 | dires.pon@nic.in vaittianadane.pon@nic.in |
| 2. | முனைவர்.இரா.இராமகிருஷ்ணன் இணை இயக்குநர் | வருடாந்திர தொழில் ஆய்வு தொழில் உற்பத்திக் குறியிடு மற்றும் பணி ஆய்வு பிரிவு அலுவலகங்களின் செயல்பாட்டுப் புள்ளி விவரங்கள், ஐந்தாவது பொருளாதாரா கணக்கெடுப்பு கணிணி அதிகாரி | (0413)-2248816 | ramakrishnan.pon@ni.in |
| 3. | திரு. சு. சந்திரசேகரன் துணை இயக்குநர் | விலைவாசி புள்ளி விவரம், மற்றும் தேசிய மாதிரி ஆய்வு மற்றும் கட்டுமானப் புள்ளி விவரங்கள், வேளாண்மை கணக்கீடு | (0413)-2248816 | eands.pon@nic.in |
| 4. | திரு. அரங்க.பார்த்தசாரதி துணை இயக்குநர் | புள்ளிவிவர புத்தகங்கள் தொகுப்பு மற்றும் வெளியீடு மாநில உள்நாட்டு உற்பத்தி கணக்கீடுப்பிரிவு, சம்பள பட்டுவாடா, | (0413)-2248816 | eands.pon@nic.in |
| | | கிளை அலுவலகம் காரைகால் | 04368-222580 | ddes.kkl@nic.in |
| 5. | திரு.K. ஞானபிரகாசம் துணை இயக்குநர் | | (0413)-2248816 | eands.pon@nic.in |
| 6. | புள்ளியல் ஆய்வாளர் | கிளை அலுவலகம் மாகி | 0490-2332222 | |
| 7. | புள்ளியல் ஆய்வாளர் | கிளைஅலுவலகம் யானம் | 0884-2321243 | |

இந்த குடிமக்களின் சாசனம் இவ்வியக்கத்தின் நான்காவது தொடராகும். இது எல்லா புள்ளி விவர மேம்பாட்டு செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வெளியீட்டின் அளவு கோலை மற்றும் பொருளடக்கத்தை மேம்படுத்தவதற்கான முயற்சிகள் மேற்க்கொள்ளபட்டுள்ளது. இங்கே முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் பிழையற்ற புள்ளிவிவரத்துக்கும் உத்தரவாதமுடைய புள்ளிவிவரத்துக்கும் பல அமைப்புக்களும் அடிப்படை காரணமான தகவல் கொடுப்பவர் அதிகமான ஒத்துழைப்பும் அதிகமான நம்பகத்தன்மையும் பொருத்தே சரியான துள்ளியமான புள்ளிவிவரம் அமையும்

என்பதாகும். சாசனம் பெதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம் மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் தடையின்றி வரவேற்கப்படுகின்றன.